# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் - 9

## அலகு – 7

# மலைநாட்டுப் பிரயாணம்


**MR. KUNARASA SELVAKUMAR (BA,PGDEmerit)**

T/MU/ELANGAITHURAIMUGATHUWARAM HINDU COLLEGE,

(NATIONAL SCHOOL)

EACHILAMPATTU, TRINCOMALEE.

# மலைநாட்டுப் பிரயாணம்

- மலைநாட்டுப் பிரயாணம் என்ற கட்டுரையினை எழுதியவர் வித்துவான் பொன்.முத்துக்குமாரன் ஆவார்.

- இக்கட்டுரை "தமிழ்மரபு" எனும் நூலிலே இடம்பெற்றுள்ளது.



- மலைநாட்டின் அழகையும் வளங்களையும் மற்றும் சிவனொளிபாத மலையின் சிறப்புக்களையும் இக்கட்டுரை மையக்கருவாகக் கொண்டுள்ளது.

- யாழ்ப்பாணத்திலிருந்து மலைநாட்டின் அழகையும் வளங்களையும் கண்டு களிக்கும் நோக்கோடு ஆசிரியர் தனது நண்பர்களுடன் புகைவண்டியில் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டமை பற்றி இக்கட்டுரை குறிப்பிடுகின்றது.



- பங்குனி மாத விடுமுறையிலே ஒழுங்கு செய்யப்பட்ட இச்சுற்றுப் பிரயாணத்தில் ஆசிரியருடன் ஐந்து நண்பர்களும் கலந்து கொண்டனர்.



- இப்பிரயாணத்தின் மூலம் கண்டி, பொல்காவல, ஹட்டன், மஸ்கெலியா முதலான இடங்களைப் பார்வையிட்டதாகவும் அங்குள்ள இயற்கை வளங்களைக் கண்டு களித்ததாகவும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.





- அழகிய ஆறுகள், குளங்கள், பசுமையான சோலைகள், வளம் மிக்க விளைநிலங்கள், தேயிலை இறப்பர்த் தோட்டங்கள், மரஞ்செடி கொடிகள், நீர்வீழ்ச்சிகள், மா, பலா, வாழை போன்ற பழமரச் சோலைகள் போன்றவை மலைநாட்டின் இயற்கை வளங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

- வழியின் இருமருங்கிலும் அடர்ந்தகாடு, காட்டு மிருகங்களின் ஒலி, வளைந்து செல்லும் பாதை, பக்தர் கூட்டம், நூற்றைம்பதுபேரைக் கொள்ளக் கூடிய இரண்டு திருவடிகள் நிறைந்த மலையுச்சி, எல்லா சமய மக்களாலும் வழிபடப்படும் இடமாகக் காணப்படுதல் முதலானவை சிவனொளிபாத மலையின் சிறப்புக்களாக வெளிக்காட்டப்பட்டுள்ளன.





- “காய்மாண்ட தெங்கின் பழம்விழக் கமுகின்..” என்ற திருத்தக்கதேவரின் பாடலில் கூறப்படுகின்ற இயற்கை வளச் சிறப்புக்கள் வெறும் புனைந்துரையயல்ல, என்பதனை இலங்கை வளத்தினூடாக ஆசிரியர் வலியுறுத்துகின்றார்.

- இச்சுற்றுப்பிரயாணத்தின் மூலம் கிடைத்த பயன்களாக உள்ளத்திலே அமைதி உண்டாகுவதாகவும், பல மக்களைக் கண்டு பழகியறியும் வாய்ப்புக் கிடைத்ததாகவும், இலங்கை வளத்தையும் மலைச்சுகத்தையும் பிறருக்கு உரைத்து மகிழ முடிந்ததையும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.



# தனிவினை கூட்டுவினை

- **தனிவினை**
- பகாப்பதங்களாக அமைந்துள்ள வினையடிகளைக் கொண்ட வினைச்சொற்கள் தனிவினைகள் எனப்படும்.
- **உதாரணம் - பாடினான், நட**

  **ஓடினான், வா**

- **கூட்டுவினை**
- பகுபதமாக உள்ள வினையடிகளைக் கொண்ட வினைச்சொற்கள் கூட்டு வினைகள் எனப்படும்.
- **உதாரணம் - கேள்விப்படு - கேள்வி + படு**

  **சொல்லிக்கொடு - சொல்லு + கொடு**

  **பின்பற்று - பின் + பற்று**

# ஒலிவேறுபாடு

- சொற்கள், எழுத்துக்களின் உச்சரிப்பு வேறுபடுதலே ஒலி வேறுபாடு என அழைக்கப்படுகின்றது.
- **உதாரணம் - வாலை – இளையது, இளம்பெண்**

**வாளை – ஒருவகை மீன்**

**வாழை – ஒருமரம், கனி**

**குரவர் - ஆசிரியர், அரசர், தந்தை**

**குறவர் - வேடர், குறிஞ்சி நில மக்கள்**

- **பின்வரும் வினாக்களுக்குரிய மிகச்சரியான விடையயைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1) “மலைநாட்டுப் பிரயாணம்” எனும் கட்டுரையின் ஆசிரியர் யார்?

1. ராணி சிதம்பரநாதன்
2. பொன். முத்துக்குமாரன்
3. வல்லிக்கண்ணன்
4. அன்பு முகைதீன்

2) மலைநாட்டுப் பிரயாணம் எனும் கட்டுரை இடம்பெற்றுள்ள இலக்கியத்தொகுப்பு யாது?

1. தமிழ்மரபு
2. புதுப்புனல்
3. நெஞ்சே அஞ்சாதே நீ
4. இலக்கியவழி

3) பின்வருவனவற்றுள் தனிவினையாகக் கொள்ளத்தக்கது,

1. நடந்தான்
2. விட்டுக்கொடுத்தான்
3. முன்னேறினான்
4. கைபிடித்தான்

4) அயர்வு, அழகு, பயிர்க்களை, அகற்று போன்ற சொற்கள் குறிப்பது,

1. காளை
2. கழை
3. கலை
4. களை

5) பின்வருவனவற்றுள் கூட்டுவினையாக வருவது,

1. சென்றான்
2. பாடுங்கள்
3. கண்டுபிடித்தான்
4. உறங்கினான்

**(10 புள்ளிகள்)**

- **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளம் இடுக.**

1. மலைநாட்டுப் பிரயாணம் பங்குனி மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது. ( )

2. இப்பிரயாணத்தில் ஆசிரியருடன் ஏழு பேர் கலந்துகொண்டனர். ( )

3. சிவனொளிபாதமலையின் ஊடாக சீதளகங்கையாறு ஓடுகின்றது. ( )

4. தந்தியடி என்பது பெயருடன் வினைசேர்ந்து உருவாகும் கூட்டுவினையாகும். ( )

5. “மறை” என்பது ஒருவகை மானைக் குறிக்கும் சொல் ஆகும். ( )

**(10 புள்ளிகள்)**

- **பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புக.**

1. இலங்கைத் தீவின் ………… எமது இதயத்தைக் கனிவித்தது.
   (அழகு, அளகு)

2. காலையில் கோயில் மணி சத்தமாக …………..
   (ஒளித்தது, ஒலித்தது)

3. பறவைகள் கூட்டமாக …………. தேடிப் பறந்து சென்றன.
   (இறை, இரை)

4. அப்பா வயலில் …………… விதைத்தார்.
   (தினை, திணை)

5. திரௌபதிக்கு நடந்ததைக் கண்ட வீமன் …………….
   (சூழுரைத்தான், சூளுரைத்தான்)

**(10 புள்ளிகள்)**

- **‘அ’ பகுதிக்குப் பொருத்தமான சொல்லை ‘ஆ’ பகுதியில் இருந்து தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் இடுக.**

| அ | | ஆ |
|---|---|---|
| 1. எழுதினான் | (….) | 1. மூங்கில் |
| 2. திருத்தக்கதேவர் | (….) | 2. கூட்டுவினை |
| 3. கழை | (….) | 3. கடல் |
| 4. தள்ளிவிட்டான் | (….) | 4. தனிவினை |
| 5. பரவை | (….) | 5. சீவகசிந்தாமணி |

(10 புள்ளிகள்)

- **பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்குமாறு வாக்கியம் அமைக்குக.**

1. விரல் ………………………………………………………….
2. விறல் ………………………………………………………….
3. பிரை ………………………………………………………….
4. பிறை ………………………………………………………….
5. களி ………………………………………………………….

(10 புள்ளிகள்)

- **பின்வருவனவற்றுள் தனிவினை, கூட்டுவினை என்பவற்றை இனங்கண்டு வேறுபடுத்தி எழுதுக.**

1. கடைப்பிடி
2. உறங்கினான்
3. ஆணியடி
4. தந்தியடி
5. ஏறினான்
6. பார்
7. கட்டிப்பிடித்தான்
8. தூக்கிவிடு
9. எறிந்தான்
10. விளையாடினான்

| இலக்கம் | தனிவினை | கூட்டுவினை |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |

(10 புள்ளிகள்)

- **பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

1. சுற்றுப்பிரயாணம் மேற்கொள்ளப்பட்ட இடங்களை வரிசையாகக் குறிப்பிடுக.
2. இலங்கைத் தீவின் அழகினை வெளிநாட்டவர் எவ்வாறு போற்றுகின்றனர்?
3. மலைநாட்டுப் பிரயாணத்தின் போது கண்டு இரசித்த இயற்கைக் காட்சிகள் யாவை?
4. “காய்மாண்ட தெங்கின் பழம்விழக் கமுகின்…” என்ற பாடலைப் பாடியவர் யார்?
5. சிவனொளிபாத மலையிலுள்ள திருவடியினை இலங்கையிலுள்ள ஒவ்வொரு மதத்தவரும் எவ்வாறு அழைக்கின்றனர்?

6. சுற்றுப்பிரயாணத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற நன்மைகளாகக் குறிப்பிடப்படுபவை யாவை?

7. தனிவினை என்றால் என்ன? உதாரணம் இரண்டு தருக.

8. வினையுடன் வினை சேர்ந்து உருவாகும் கூட்டுவினைக்கு இரண்டு உதாரணம் தருக.

9. பெயருடன் வினை சேர்ந்து உருவாகும் கூட்டுவினைக்கு இரண்டு உதாரணம் தருக.

10. பின்வரும் அரும்பதங்களின் பொருளைத் தருக.

1. பிரயாணம் ……………………………………

2. எஞ்ஞான்றும் …………………………………

3. சழக்குகள் ……………………………………

4. புனைந்துரை …………………………………..

5. வியப்பு ……………………………………………..

6. சீதளம் ……………………………………………..

7. பங்கயம் ……………………………………………

8. வருக்கை ……………………………………….

**(40 புள்ளிகள்)**

# விடைகள்

## 1. பல்தேர்வு வினாக்கள்

1. பொன்.முத்துக்குமாரன்
2. தமிழ்மரபு
3. நடந்தான்
4. களை
5. கண்டுபிடித்தான்

## 2. சரி பிழை இடுதல்

1. சரி
2. பிழை
3. சரி
4. சரி
5. பிழை

# விடைகள்

## 3. இடைவெளி நிரப்புதல்

1. அழகு
2. ஒலித்தது
3. இரை
4. தினை
5. சூளுரைத்தான்

## 4. இணைத்தல்

1. எழுதினான் - 4
2. திருத்தக்கதேவர் - 5
3. கழை - 1
4. தள்ளிவிட்டான் - 2
5. பரவை - 3

# விடைகள்

## 5. வாக்கியம் அமைத்தல் (பொருத்தமான வாக்கியம்)

1. விரல் - (கைவிரல்) – அம்மா விரலில் தங்க மோதிரம் அணிந்திருந்தார்.
2. விறல் - (வெற்றி, வீரம்) - இலங்கைவேந்தன் இராவணன் மாபெரும் வீரனாவான்.
3. பிரை – (பாதி, சுவரின் மாடம்) - மாம்பழத்தில் பாதியை தங்கைக்குக் கொடுத்தேன்.
4. பிறை – (சந்திரன்) - இரவில் பூரண சந்திரன் ஒளிபரப்பிக் கொண்டிருந்தது.
5. களி – (களிமண்) - களிமண்ணில் மாணவர்கள் உருவங்களைச் செய்தார்கள்.

## 6. வேறுபடுத்தி எழுதுதல்

| தனிவினை | கூட்டுவினை |
|---|---|
| உறங்கினான் | கடைப்பிடி |
| ஏறினான் | ஆணியடி |
| பார் | தந்தியடி |
| எறிந்தான் | கட்டிப்பிடித்தான் |
| விளையாடினான் | தூக்கிவிடு |

# விடைகள்

## 7. சுருக்கமான விடைகள்

1. பொல்காவல, கண்டி, ஹட்டன், மஸ்கலியா போன்ற இடங்களாகும்.

2. அழகும் வளமும் அமைந்தது, இந்துமா கடலின்கண் ஒரு முத்துப் போலவும், பசும் பொற்குன்று போலவும் ஒளிர்கின்ற நாடு என வர்ணிக்கின்றனர்.

3. அழகிய ஆறுகள், குளங்கள், பசுமையான சோலைகள், வளம் மிக்க விளைநிலங்கள், தேயிலை இறப்பர்த் தோட்டங்கள், மரஞ்செடி கொடிகள், நீர்வீழ்ச்சிகள், மா, பலா, வாழை போன்ற பழமரச்சோலைகள் போன்றவற்றைக் கண்டு இரசித்தனர்.

4. திருத்தக்க தேவர் (சீவகசிந்தாமணி)

5. சைவமக்கள் - சிவபெருமானுடைய திருவடி
கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் - ஆதாம்
பௌத்தர்கள் - புத்தபிரானுடைய திருவடி

# விடைகள்

## 7. சுருக்கமான விடைகள்

6. இக்கட்டுரையின் பயன்களாக உள்ளத்திலே அமைதி உண்டாகுவதாகவும், பல மக்களைக் கண்டு பழகியறியும் வாய்ப்புக் கிடைத்ததாகவும், இலங்கை வளத்தையும் மலைச்சுகத்தையும் பிறருக்கு உரைத்து மகிழ முடிந்ததாகவும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

7. பகாப்பதங்களாக அமைந்துள்ள வினையடிகளைக் கொண்ட வினைச் சொற்கள் தனிவினைகள் எனப்படும்.

உதாரணம் - வரைந்தான், ஓடினான்

8. விட்டுக் கொடுத்தான், ஏற்றிவிட்டான், சுட்டிக்காட்டு

9. உத்தரவிடு, கைபிடி, கைதுசெய்

## 10. அரும்பதங்களின் பொருள்

1. பிரயாணம் - பயணம்
2. எஞ்ஞான்றும் - எப்போதும்
3. சழக்குகள் - பயனற்ற செயல்கள்
4. புனைந்துரை - கற்பனை
5. வியப்பு - அதிசயம்
6. சீதளம் - குளிர்ச்சி
7. பங்கயம் - தாமரை
8. வருக்கை - பலாப்பழம்